| O.S.No. 56/2025 | PW2: திருமதி. தமிழ்ச்செல்வி க/பெ. திரு. அன்பழகன் | 21-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் Staff Nurse ஆக வேலை செய்கிறேன். எனக்கு கடவுள் நம்பிக்கை உள்ளது. எனக்கு வாதியை 20 வருடங்களாக தெரியும். அவர் எனது பக்கத்துவீட்டுக்காரர். பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் வாதி வீட்டிற்கு வரும்போதும் போகும்போதும் பார்த்துள்ளேன். பிரதிவாதி வாதியிடம் பணம் வாங்கும்போது பார்த்துள்ளேன். பிரதிவாதி விண்ணவாடி கிராமத்தை சேர்ந்தவர். வாதியிடம் பிரதிவாதி நிலம் வாங்கியது தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் கண்டுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். வா.சா.ஆ.1ல் பிரதிவாதி ஸ்டேம்புக்கு மேலே ஒரு கையெழுத்தும், ஸ்டேம்புக்கு கீழே ஒரு கையெழுத்தும போட்டுள்ளார். புரோநோட்டினை வாதிதான் எழுதினார். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தும், அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தும் வேறுபாடாக உள்ளது என்றால் இல்லை, ஒன்றாகத்தான் உள்ளது. வா.சா.ஆ.1 புரோநோட்டு முன்னிலைக்கு பிரதிவாதி எந்த கடனையும் வாதியிடம் வாங்கவில்லை என்றாலும், வாதி எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 புரோநோட்டினை வாதி மோசடியாக உருவாக்கினார் என்றாலும், அதற்கு நான் துணை போனேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.21 17:42:18 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**